بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *17/07/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இணையற்ற நன்றியுணர்வு

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔
بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾
اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்லாஹ் மனிதனைப் படைத்தபோது, அதற்கு முன்பே அவனது பயனுக்காக எண்ணற்ற அருட்கொடைகளைப் படைத்தான். அல்லாஹ்வுடைய இந்த அருள், நிச்சயமாக அடியான் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்றே கோருகிறது. ஒவ்வொரு நபியும் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அடியார்களாக ஆகுங்கள் என்றே அறிவுரை வழங்கினார்கள். எல்லோரையும் விட மேலாக நன்றி செலுத்துவதற்கான மிகச் சிறந்த முன்மாதிரியை நமது தலைவர் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காட்டிச் சென்றுள்ளார்கள்.

ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த அழகிய முன்மாதிரி, அன்னார் செய்த துஆக்கள் மற்றும் அன்னார் மேற்கொண்ட வழிமுறைகள் குறித்தே இன்று நான் எடுத்துரைப்பேன். ஓர் அறிவிப்பில் வருகிறது; **ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "ஈமான் என்பது இரண்டு பகுதிகளைக் கொண்டது; அதில் பாதி பொறுமையிலும் (மறு)பாதி நன்றியுணர்விலும் அடங்கியுள்ளது."

நாம் ஆழ்ந்து நோக்கினால், பொறுமை என்பதும் நன்றியுணர்வின் ஓர் அம்சமே என்பது தெரிய வரும்.

**ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "நம்பிக்கையாளரின் விவகாரம் முற்றிலும் நன்மையானதாகும்; இது நம்பிக்கையாளரைக் காட்டிலும் வேறு எவருக்கும் அமைவதில்லை. அவருக்கு ஏதேனும் மகிழ்ச்சி ஏற்பட்டால் அவர் நன்றி செலுத்துகிறார்; அது அவருக்கு நன்மையாக அமைகிறது. அவருக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் அவர் பொறுமை காக்கிறார்; அதுவும் அவருக்கு நன்மையாகவே அமைகிறது."

**ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "எவர் மக்களுக்கு நன்றி செலுத்த மாட்டாரோ அவர் அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்துவதில்லை."

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதோடு சேர்த்து அடியார்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும் என்று அன்னார் கட்டளையிட்டார்கள். இதன்படி செயல்பட்டால், ஓர் உண்மையான இஸ்லாமிய சமூகம் உருவாக முடியும்.

**ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "யார் குறைவானவற்றிற்கு நன்றி செலுத்துவதில்லையோ, அவர் அதிகமானவற்றிற்கும் நன்றி செலுத்துபவராக இருக்க மாட்டார் என்று ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்." மேலும், "அல்லாஹ்வுடைய அருட்கொடைகளைப் பற்றி எடுத்துரைப்பதும் நன்றி செலுத்துவதாகும்" என்று கூறிய ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், "ஜமாஅத் (தாக ஒற்றுமையாக இருப்பது) என்பது அருளாகும்; பிரிவினை என்பது வேதனையாகும்" என்றும் கூறினார்கள்.

**ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "எவருக்கு ஏதேனும் ஒரு நன்மை செய்யப்படுகிறதோ, அவர் அதனைச் செய்தவரிடம் ஜஸாக்கல்லாஹு கைரன் جزاك الله خيراً (அல்லாஹ் உமக்குச் சிறந்த நற்கூலியை வழங்குவானாக) என்று கூறினால், அவர் புகழ்வதற்கான உரிமையை நிறைவேற்றிவிட்டார்" என்று ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் அன்னார் கூறினார்கள்: "அல்லாஹ் ஏதேனும் ஒரு சமுதாயத்திற்கு நன்மையையும் பரகத்தையும் வழங்க நாடினால் அவர்களது ஆயுட்காலத்தை நீட்டிக்கிறான். மேலும் அவர்களுக்கு நன்றியுணர்வை இல்ஹாமாக இறக்குகிறான் (அதாவது நன்றி செலுத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்குகிறான்)."

ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களின் கையைப் பிடித்து, "முஆஸே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உம்மை நேசிக்கிறேன். உமக்கு நான் ஒன்றை வலியுறுத்துகிறேன்; நீர் **ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும், அல்லாஹ்வே! உன்னை நினைவு கூருவதற்கும் உனக்கு நன்றி செலுத்துவதற்கும், உனது வணக்க வழிபாடுகளை அழகிய முறையில் நிறைவேற்றுவதற்கும் எனக்கு உதவி புரிவாயாக என்று கூறுவதை (எக்காரணம் கொண்டும்) விட்டுவிடாதீர்**" என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகிறது; **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு பின்வரும் துஆவைக் கற்றுக்கொடுத்தார்கள்**; "அல்லாஹ்வே! ஒவ்வொரு செயலிலும் நான் உன்னிடமிருந்து உறுதியையும், நேர்வழியில் நிலைத்திருக்கும் தன்மையையும் வேண்டுகிறேன். உனது அருட்கொடைக்கு நன்றி செலுத்தும் பண்பையும், உனது வணக்க வழிபாட்டின் அழகையும் உன்னிடமே கேட்கிறேன். உன்னிடம், உண்மை பேசும் நாவையும் வேண்டுகிறேன். மேலும், தூய உள்ளத்தின் மூலம் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். நீ அறிந்திருக்கும் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்; நீ அறிந்திருக்கும் நன்மைகளை உன்னிடமே கேட்கிறேன். மேலும் உன்னிடம் மன்னிப்பையும் வேண்டுகிறேன்."

**தொழுகையில் ஓதுவதற்கு மிகச் சிறந்த துஆ எது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அன்னார் கூறினார்கள்**: "அல்லாஹ்வே! அனைத்துப் புகழும் உனக்கே உரியது. எல்லா நன்றியும் உனக்கே உரியது. அனைத்து ஆட்சியும் உனக்கே உரியது. அனைத்துப் படைப்புகளும் உனக்கே உரியவை. ஒவ்வொரு விஷயமும் உன் பக்கமே திரும்புகிறது. நாங்கள் உன்னிடமிருந்து எல்லா விதமான நன்மைகளையும் வேண்டுகிறோம். ஒவ்வொரு தீமையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம்."

பின்னர், **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த மற்றொரு துஆவும் காணக் கிடைக்கிறது**; அன்னார் கூறினார்கள்: "என் இறைவா! எனக்கு உதவி செய்; எனக்கு எதிராக எவருக்கும் உதவி செய்துவிடாதே. எனக்கு வெற்றியைத் தா; எனக்கு எதிராக எவருக்கும் வெற்றியைக் கொடுத்துவிடாதே. எனக்காகத் திட்டமிடு; எனக்கு எதிராகத் திட்டமிட்டு விடாதே. எனக்கு நேர்வழி காட்டு; எனக்குரிய நேர்வழியை எனக்கு எளிதாக்கு. என் மீது அநீதி இழைப்பவனுக்கு எதிராக எனக்கு உதவி புரிவாயாக. அல்லாஹ்வே! என்னை உனக்கு நன்றி செலுத்துபவனாகவும், உன்னை நினைவு கூருபவனாகவும், உனக்கு அஞ்சுபவனாகவும், உனக்குக் கீழ்ப்படிந்து நடப்பவனாகவும், உன்னை அதிகம் பின்பற்றுபவனாகவும், உனக்கு மிகவும் பணிந்து நடப்பவனாகவும் ஆக்குவாயாக. என் இறைவா! என் பாவ மன்னிப்பை ஏற்றுக்கொள்வாயாக. என் துஆவை அங்கீகரிப்பாயாக. என் சான்றை ஏற்றுக் கொள்வாயாக. என் உள்ளத்திற்கு நேர்வழி காட்டுவாயாக. என் நாவை சீர்படுத்துவாயாக. என் உள்ளத்திலிருந்து வஞ்சத்தை நீக்கிவிடுவாயாக."

**இன்னொரு துஆவும் உள்ளது**; "அல்லாஹ்வே! நான் உனக்கு மிக அதிகமாக நன்றி செலுத்துபவனாகவும், உன்னை அதிகமாக நினைவு கூருபவனாகவும், உனது

அறிவுரைகளைப் பின்பற்றுபவனாகவும், உனது வலியுறுத்தப்பட்டக் கட்டளைகளை (எப்போதும்) நினைவில் வைத்திருப்பவனாகவும் என்னை ஆக்குவாயாக."

**மனிதன் இந்த துஆவை தினமும் ஓதி வந்தால், அவனுக்குள் தவறான எண்ணங்கள்கூட ஏற்படாது. மேலும், அவன் தவறான செயல்களையும் செய்ய மாட்டான்.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அன்னாருடைய ஸஹாபிகளும் மழையின் ஆரம்பத் துளிகளைத் தமது தலைகளில் ஏந்துவார்கள். "இது நமது மிக மேலான இறைவனிடமிருந்து வந்த புதிய அருட்கொடையாகும்" என்று கூறி மழைக்காக நன்றியைத் தெரிவிப்பார்கள்.

கழிவறையை விட்டு வெளியே வரும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "எனக்குத் தீங்கு விளைவிக்கும் பொருளை என்னிடமிருந்து அகற்றி எனக்கு ஆரோக்கியத்தை அளித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியது" என்ற துஆவை ஓதுபவர்களாக இருந்தார்கள்.

இரவில் தமது படுக்கையில் சாயும்போது, "அல்லாஹ்வே! உனது பெயரைக் கொண்டே நான் மரணிக்கிறேன்; உயிர்த்தெழுகிறேன்" என்று துஆ செய்வார்கள். அன்னார் விழித்தெழும்போது, "நம்மை மரணிக்கச் செய்ததற்குப் பிறகு, நம்மை உயிர்ப்பித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியது; மேலும், அவனிடமே நாம் திரும்ப வேண்டியுள்ளது" என்று துஆ செய்வார்கள்.

**அன்னார் உணவு உண்ணத் தொடங்கும்போது அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவார்கள்; புதிய ஆடை அணியும்போது அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவார்கள்; சுருக்கமாகக் கூறின், அன்னார் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தாத அல்லது அவனை போற்றிப் புகழாத எந்தவொரு தருணமும் இருந்ததில்லை**.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கலைந்த தலைமுடியுடன் ஒருவர் வந்தார். அப்போது அன்னார், தன் தலைமுடியைச் சீரமைத்துக் கொள்வதற்கு இவருக்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லையா என்று கேட்டார்கள். அழுக்கான ஆடை அணிந்திருந்த மற்றொரு நபரை அன்னார் கண்டபோது, தனது ஆடையைத் துவைத்துக் கொள்வதற்கு இவருக்குத் தண்ணீர் கிடைக்கவில்லையா என்று கேட்டார்கள்.

அழுக்கான ஆடைகளை அணிவதற்குப் பதிலாக ஆடைகளைத் துவைத்து உடுத்துங்கள். தண்ணீர் கிடைக்கவே செய்கிறதே! எனவே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். தூய்மையும் சுத்தமும் ஒருபுறம் சுகாதாரத்தை வெளிப்படுத்துகிறது என்றால், மறுபுறம் அதில் நன்றியுணர்வின் அம்சமும் அடங்கியுள்ளது. அதாவது, அல்லாஹ்வுக்கு நன்றியும் செலுத்த வேண்டும்; மக்கள், 'இவர் என்ன கோலத்தில் இருக்கிறார்!' என்று கூறும் வகையில் தங்களின் தோற்றத்தை அமைத்துக் கொள்ளக்கூடாது.

**"எவருடைய உள்ளத்தில் கடுகளவாவது பெருமை இருக்கிறதோ, அவர் சொர்க்கத்தில் நுழைய முடியாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.** அப்போது ஒருவர் அன்னாரிடம், ஒரு மனிதன் தனது ஆடை அழகாக இருக்க வேண்டும் என்றும், தனது காலணி அழகாக இருக்க வேண்டும் என்றும் விரும்பினால் (அது பெருமையாகுமா?) என்று கேட்டார். அதற்கு அன்னார், அல்லாஹ் அழகானவன்; அவன் அழகையே விரும்புகிறான். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை! **பெருமை என்பது என்னவென்றால், தன்னை பெரியவனாகக் கருதிக்கொண்டு உண்மையை மறுப்பதும், மக்களை இழிவாகக் கருதுவதுமே ஆகும்" என்று கூறினார்கள்**.

பத்ர் போரின்போது காஃபிர்கள் அழிந்ததற்கும், அல்லாஹ்விடமிருந்து கிடைத்த வெற்றிக்கும் அன்னார் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். அதேபோன்று, மக்கா வெற்றியின் போது நன்றியுணர்வுடன் அன்னார் செய்த துஆக்கள் குறித்தும் காண முடிகிறது. அந்தத் தருணத்தில் அன்னார் ஹஸ்ரத் உம்மு ஹானி (ரலி) அவர்களின் வீட்டில் எட்டு ரக்அத்கள் ளுஹா தொழுகையை நிறைவேற்றினார்கள்.

**ஹஜ்ஜதுல் விதா (இறுதி ஹஜ்ஜுடைய) தருணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த ஒரு துஆவைப் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது**; "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை. அவன் ஏகனாவான். அவனுக்கு இணை யாருமில்லை. ஆட்சி அவனுக்கே உரியது. புகழும் அவனுக்கே உரியது. அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றலுடையவன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை. அவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றினான். தனது அடியானுக்கு உதவி புரிந்தான். (எதிரிப்) படையை அவன் ஒருவனாகவே தோல்வியடையச் செய்தான்."

**ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "(இந்த) இரண்டு பண்புகள் யாரிடம் காணப்படுகிறதோ அவரை அல்லாஹ் பொறுமையாளராகவும் நன்றியுடையவராகவும் எழுதி விடுகிறான். முதலாவது (பண்பு) என்னவென்றால், ஒரு மனிதன் தனது மார்க்க விஷயத்தில் தன்னை விட உயர்வாக இருப்பவரைப் பார்க்க வேண்டும்; அவரைப் பின்பற்ற வேண்டும். இரண்டாவது (பண்பு) என்னவென்றால், உலக விஷயத்தில் தன்னை விட தாழ்ந்த நிலையில் இருப்பவரைப் பார்க்க வேண்டும்; அதற்காக அல்லாஹ்வைப் புகழ வேண்டும்."

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "உங்களுக்குக் கீழ் இருப்பவரைப் பாருங்கள்; உங்களுக்கு மேல் இருப்பவரைப் பார்க்காதீர்கள். நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடையை இழிவாகக் கருதாமல் இருப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்."

"**நான்கு விஷயங்கள் எவருக்கு வழங்கப்பட்டு விட்டனவோ, அவருக்கு இம்மை மற்றும் மறுமையின் நன்மைகள் வழங்கப்பட்டு விட்டன**. அவை, நன்றியுணர்வுள்ள உள்ளம்; இறைவனை நினைவு கூரும் நாவு; சோதனையின் போது பொறுமை காக்கும் உடல்; தனது கற்பின் விஷயத்திலும் தனது கணவனின் விஷயத்திலும் அவனுக்குத் துரோகம் செய்யாத மனைவி ஆகியவையாகும்" என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் எப்போதும் இறைவனை நினைவு கூருபவர்களாக இருந்தார்கள்.

அன்னார் தமது உம்மத்திற்கு முன்னால் நன்றியுணர்வின் மிக மேலான முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். மேலும், நன்றி செலுத்துமாறு நமக்கு அறிவுரையும் வழங்கியுள்ளார்கள்.

***குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:*** இன்ஷா அல்லாஹ்! அடுத்த வெள்ளிக்கிழமை முதல் அஹ்மதிய்யா ஜமாஅத் பிரிட்டனுடைய ஆண்டு மாநாடு தொடங்கவுள்ளது. அல்லாஹ் இதனை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்க வேண்டும் என்று துஆ செய்யுங்கள். மேலும், அனைவரையும் எல்லா வகையிலும் தனது பாதுகாப்பில் வைத்திருப்பானாக. தீவிர தட்பவெப்ப நிலை மற்றும் வெப்பத்தின் காரணமாகச் சில ஆபத்துகளும் உள்ளன. எல்லா விதமான தீய தாக்கங்களிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக. சில நேரங்களில் வெயிலில் நின்று கொண்டு டியூட்டி கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது; கடினமான டியூட்டியாகவும் இருக்கும். மிக அழகிய முறையில் தம் கடமைகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை அவர்களுக்கும் அல்லாஹ் வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)